1994 ஏப்ரல் 27]

அலுவலர் அவர்களின் பரிசீலனையில் உள்ளது. விரைவிலே இது மத்திய அரசினுடைய அனுமதிக்கு அனுப்பப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றுவேறு கேட்டீர்கள். இதே தான் அதுவும்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வனத் துறையானது அனுமதி கொடுத்து இது பொதுப் பணித் துறையால் நிறைவேற்றப்பட வேண்டும். அல்லது பொதுப் பணித் துறையிலிருந்து பணம் பெற்றுக்கொண்டு வனத் துறையே இந்தக் காரியத்தை செய்து கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய அனுமதியைப் பெறாமல் நம்முடைய தமிழக அரசினுடைய வனத் துறை இதைச் செய்ய இயலாது. எனவே மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய முடியும். வனம் சாரா எந்தப் பணிக்குமே மத்திய அரசினுடைய அனுமதியைக் கோராமல், பெறாமல் செய்ய இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே மத்திய அரசுக்கு இதைப் பரிந்துரை செய்து அனுப்பி அதனுடைய அனுமதியைப் பெறுவதற்கு மாநில அரசு முயற்சியை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 412, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

412—

வனப் பகுதிகளில் சோதனைச் சாவடிகள் அமைத்தல்.

**23338—திருமதி கே. மரியம் உல் ஆசியா:*

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காடுகள் அழிக்கப்படுவதைத் தடுக்க அனைத்து வனப் பகுதிகளிலும் சோதனைச் சாவடிகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 27

தமிழக வனப் பகுதியிலிருந்து திருட்டுத்தனமாக வனப் பொருட்களைக் கடத்திச் செல்வதைத் தடுக்க தமிழகத்தில் முக்கியமான இடங்களில் 101 சோதனைச் சாவடிகள் அமைத்து செவ்வனே செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காடுகள் இருக்கின்ற வரை மனிதனும் வாழ்வான்" என்பது காஷ்மீரியப் பழமொழியாகும். காடுகளை நம்பித்தான் மனிதனுடைய வாழ்க்கை அமைந்திருக்கிறது என்பதை இப்பழமொழி தெளிவாக உணர்த்துகின்றது. காடுகள் அழிக்கப்படுவதால் சுற்றுப்புறச் சூழல் மாசுப்படுவதோடு இயற்கை வளங்களும் குறைகின்றன. அதைப்போல அபூர்வ விலங்கினங்களும், பறவைகளும் அழிந்துவிடுகின்றன. காடுகளை அழிப்பதால் நகர்ப் பகுதிகளில் ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக்கு 35 டன் தூசியும், கிராமப்புறங்களில் 19 டன் தூசியும் சேர்ந்து சுற்றுப்புறச் சூழல் மாசுப்படுகின்றது. ஆகவே காடுகளை கண் இமைபோல் கட்டிக்காப்பதற்காக வனப் பகுதியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 101 சோதனைச் சாவடிகள் அமைப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் வனத்தைச் சுற்றி 3 ஆயிரம் கிராமங்கள் அமைந்துள்ளன. மக்கள் பல்வேறு தேவைகளுக்கு மரங்களை வெட்டுவதைத் தடுப்பதற்கும், லாரி போன்ற பெரிய வாகனங்களில் சந்தனக் கட்டைகள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்கும் தேவையான வனப் பகுதிகளில் இன்னும் கூடுதலான சோதனைச் சாவடிகளை அமைப்பதற்கும், அதேபோன்று தப்பிச் செல்கின்ற வாகனங்களை மடக்கிப் பிடிப்பதற்கு சோதனைச் சாவடிகளில் ஒயர்லெஸ் என்ற கம்பியில்லாத் தந்தி அமைப்பதற்கும், அதேபோன்று காடுகள் அழிவதைத் தடுப்பதற்கு ''வன மன்றங்கள்'' அமைப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 101 வனச் சாவடிகள் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்தேன். அதைத் தொடர்ந்து இன்றைக்கு உணவு வினியோகத் துறை, வணிக வரித் துறை, வனத் துறை ஆகியவைகள் இணைந்து மிகப் பெரிய அளவு ஒருங்கிணைந்து சோதனைச் சாவடிகளை -- நம்முடைய மாநிலத்தினுடைய பல்வேறு எல்லைப்புறங்கள் வழியாகக் கடத்தப்படுகிற களியக்காவிளை, ஒசூர், பூந்தமல்லி ஆகிய இடங்களிலே நிறுவுவதற்காக தமிழக முதல்வர் அவர்கள் இன்றைக்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

1994 ஏப்ரல் 27]

எனவே, வனத்திலிருந்து எடுத்துச் செல்வதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே வன மன்றங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இன்டர் — பேஸ் பாரஸ்ட்ரி என்கிற திட்டத்தினுடைய அடிப்படையில் காடுகளைச் சுற்றியிருக்கிற குக்கிராமங்களில் இந்த வன மன்றங்கள் உருவாக்கப்பட்டு, அவை மக்களோடு வனத்தைப் பாதுகாப்பது குறித்து கருத்துக்களைத் தெரிந்துகொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சந்தன மரங்கள் போன்றவைகளைக் கடத்துவதை எல்லாம் மிகக் கடுமையான நடவடிக்கைகள் மூலமாகத் தடை செய்து வருகிறோம் என்பதையும் தெரிவிக்கிற நேரத்தில், சந்தனக் கடத்தலைத் தடுப்பதற்காக ஏற்கெனவே ஒரு டாக் ஸ்குவாட் கோயம்பத்தூரில் இருக்கிறது. அதை சென்னை, சேலம், திருப்பத்தூர் ஆகிய பகுதிகளிலே விரிவுபடுத்தவும், தமிழக முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். எனவே, தமிழக அரசைப் பொறுத்தவரையில் எல்லா வகையிலுமே வனப் பொருட்களைக் கடத்துவதைக் கடுமையாகத் தடுக்கிற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளை அழிப்பவர்கள் மீதும், ஒரு தடவைக்கு மேல் மரங்களைக் கடத்திச் செல்பவர்கள்மீதும் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும், காடுகளைப் பாதுகாப்பதற்கு மேலை நாடுகளில் இருப்பதைப்போல, வசதிகள் அறிமுகப்படுத்தப்படுமா என்பதையும், மேலும் தாய்லாந்து நாட்டில் பாங்காக் நகரில் உள்ள "கேசட்சார்ட் பல்கலைக் கழகத்தில்" சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் 6 மாதத்திற்கான சான்றிதழ் பயிற்சி ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஒரு பகுதியாய் மேட்டுப்பாளையத்தில் இயங்கிவரும் வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலும் வனத் துறை நடத்துகின்ற மேல்நிலைப் பள்ளியிலும் இதுபோன்ற ஒன்றைத் தொடங்கி வனத் துறையைச் சார்ந்தவர்களுக்குப் பயிற்சியளிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வதேச அளவில் வனங்களைக் காப்பாற்றுவது என்கிற சிந்தனையை எப்படி நாடுகள் கொண்டிருக்கின்றனவோ அதையே தமிழகமும் கொண்டு இன்றைக்கு தமிழகத்தில் செயல்படுத்தி வருகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், உதகை, கோவை போன்ற வனக்

கல்லூரிகளில் நம்முடைய வனத் துறையைச் சார்ந்தவர்களுக்கு எல்லாம் பயிற்சி ஒழுங்காகக் கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே வனங்களைக் காப்பாற்றுவதில் மேலை நாடுகளினுடைய சிந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலும், நம்முடைய தமிழகத்தில் இருக்கிற ரேஞ்சர்கள் உட்பட பல்வேறு அதிகாரிகளை, பல்வேறு வெளிநாடுகளுக்குக்கூட சென்று அந்த வனங்களைத் தெரிந்துகொள்வதற்காக ஏற்பாடு செய்திருக்கிறோம். எனவே, அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஈஸ்வரன், கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்தை அழிப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வனத் துறையிலிருந்து 101 சோதனைச் சாவடிகளை அமைத்திருப்பதாக அறிவித்தார்கள். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அழிப்பதைத் தடுப்பதற்காக.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதுகாப்பதற்காக. ஆனால் தமிழகத்தில் மலையடிவாரத்தில் வழித் தடங்கள் நிறைய இருக்கின்றன. என்னுடைய வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் மேற்குத் தொடர்ச்சி மலைக்குப் போகக் கூடிய பகுதிகளில் 12 வழித் தடங்கள் இருக்கின்றன. அதில் இரண்டு இடங்களில் தான் இந்த சோதனைச் சாவடிகள் -- தடுப்பதற்கான வழிவகைகள் இருக்கின்றன. அதைக் கூட அப்புறப்படுத்திவிட்டு, மரத்தைத் திருடுபவர்கள் அதைக் காலி செய்துவிட்டு வாடிக்கையாக மரத்தை அழித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, மலையடிவாரத்தில், மேற்குத் தொடர்ச்சி மலைப் பாதைகளுக்குச் செல்லக்கூடிய ரோடுகள் சுமார் ஆயிரத்திற்கு மேல் இருக்கின்றன. அதை நீங்கள் துரிதமாகத் தடுப்பதற்கு வழி செய்தால்தான் இந்த வனத்தை அழிப்பதைத் தடுக்க முடியும். அதற்கு ஏதாவது முயற்சி எடுத்து, தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து செம்மையானதுதான். ஆனால் ஆயிரம் வழித் தடங்கள் இருக்குமானால் ஆயிரம் வழித் தடங்களிலும் நாம் செக்-போஸ்ட்கள் அமைக்க முடியாது. 5 கோடி

1994 ஏப்ரல் 27]

மக்கள் இங்கே வாழ்கிறார்கள் என்றால் 5 கோடி மக்களுக்கும் காவலர் என்று வைக்க முடியாது. எனவே, வன வளத்தை எடுத்துச் செல்வதைத் தடுப்பதற்கு எந்த வகையில் அதிமுக்கியத்துவம் கொடுத்து தடுக்க முடியுமோ அதைத் தடுப்பதற்கு நாம் செவ்வனே செயலாற்றி வருகிறோம். எனவே, அது தடுக்கப்பட்டு வருகிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நாடு சுதந்திரம் அடைந்த நேரத்தில் தமிழகத்தைப் பொறுத்தவரை 14 சதவிகிதம் தான் இங்கே வனம் இருந்தது. ஆனால் இன்றைக்கு 17 சதவிகிதத்திற்கு அதிகமாக வனங்கள் இருக்கின்றன. சமூக வனங்களை உருவாக்கியதன் மூலமாக மேலும் 3 சதவிகிதம் நாம் அதிகமாக உருவாக்கியிருக்கிறோம். இன்றைக்கு தேசிய அளவிலே தமிழகத்தில் தான் வனங்கள் சிறப்பாகப் பாதுகாக்கப்படுகின்றன என்பதும், மத்திய அரசினுடைய அண்மைக் கால புள்ளிவிவரங்களிலிருந்து தமிழக வனத் துறை குறித்து சிறப்பான கருத்துக்களை மத்திய அரசு - இன்றைக்கு அவர்கள் தெரிந்து வைத்து இருக்கிறார்கள். இன்றைக்கு மாநில அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து, இதைச் செய்கிற நேரத்தில், மத்திய-மாநில அரசுகள் சம்பந்தப்பட்ட இந்த வன வளங்களைப் பாதுகாப்பதற்கு மத்திய அரசு அதிக நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்று இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 413, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

413—

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைத்தல்.

24964—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை:

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) பணி எப்பொழுது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS